[1978 பிப்ரவரி 28

புதுக்கோட்டை மாவட்டத்தில் முதன்மைக்கல்வி அலுவலகம்.

*308 வினா—திரு. நா. சுந்தரராஜ்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் தனியாக முதன்மைக் கல்வி அலுவலகம் திறக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது திறக்கப்படும்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) மற்றும் (ஆ) ஆம். அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவரவர்களே, புதுக்கோட்டை மாவட்டம் என்று தனி மாவட்டமாக அறிவிக்கப்பட்டு இவ்வளவு நாட்களாகியும் இதுவரையில் தனியாக முதன்மைக் கல்வி அலுவலகம் இல்லாமல் இருப்பது பெரிய குறையாக இருப்பதால் வருகின்ற கல்வி ஆண்டுக்கு முன்பாகவே இந்த அலுவலகம் திறக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, பரிசீலனை முடிந்தவுடன் முதன்மைக் கல்வி அலுவலகம் ஏற்படும்.

தொழிலாளர் இன்சூரன்ஸ் மருத்துவ மனைகள்.

*309 வினா—திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தொழிலாளர் இன்சூரன்ஸ் மருத்துவ மனைகளின் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) புதிய மருத்துவ மனைகள் கட்டத் திட்டமுள்ளதா?

(இ) ஆம் எனில், இவ்வாண்டு எத்தனை இடங்களில் கட்டப்படும்?